# அரசறிவியல்

தரம் - 12, 13



Start Your Learning Journey with e-thaksalawa

The National e-learning Portal for The General Education

## தேர்ச்சி மட்டம்: 3.1

அரசு என்பது வரலாற்று மற்றும் சமூகத் தோற்றப்பாடு ஆகும். வரையறுக்கப்பட்ட பிரதேசத்தின் அதிகளவில் அல்லது குறைந்நதளவில் வாழ்கின்ற சமூதாய மக்களுக்காக பொதுச் சட்டமும் ஒழுங்கமைக்கப்பட்ட சுதந்திரமான அல்லது ஓரளவு வெளித்தலையீடு உள்ள அரசாங்கம் காணப்படும். இதுகுடியிருப்பாளர்களின் உயர் அமைப்பாகும்.

அரசானது வரலாற்று ரீதியாக விசேடத்துவமிக்க படைப்பாகும். கோத்திர அரசுமுதல் நவீன ஜனநாயக அரசுகள் வரை அரசில் ஏற்பட்ட வரலாற்று அபிவிருத்தி இதனையே காட்டுகின்றது.

அரசின் கருவியான அரசாங்கத்தின் பணிகளாக சம்பிரதாய பூர்வமாக விளங்கிக் கொள்ளப்படுவது பிரதான மூன்று துறைகள் ஊடாக செயற்படுகின்றன.

- சட்டத்துறை - சட்டங்களை உருவாக்கல்
- நிறைவேற்றுத்துறை - சட்டங்களை நடைமுறைப்படுத்தல்
- நீதித்துறை - நீதியை நிர்வகித்தல்

என்ற முக்கிய பணிகளைக் கொண்டிருந்த போதும் பரந்துபட்ட பணிகளை மேற்கொள்கின்றன.

**மேலும்**

- சொத்துக்களைப் பாதுகாத்தல்
- சமுக அமைதியைக் கண்காணித்தல்
- நீதியை நிலைநாட்டல்
- கொள்கை உருவாக்கம்
- பொருளாதார நிர்வாகம் மற்றும் வழிநடத்தல்
- சமுகநிர்வாகம் மற்றும் சமுக கண்காணிப்பு, வழிநடத்தல்
- சமுகத்தின் சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பேணல்
- யுத்தப் பிரகடனம் மற்றும் யுத்தம் செய்தல்

சமுகத்தில் காணப்படும் அரசியலதிகாரத்தின் மையமாக அரசு புலப்படுகின்றது.

- மனிதர்கள் ஒன்றாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள ஒரு ஊடகமாக அரசியல் ரீதியில் ஏற்படும் ஒற்றுமையை குறிப்பிடலாம்.
- மனிதர்கள் ஒன்றாக இணையும் வேறு அமைப்புக்களாக சுயாதீன ஆணைக்குழுக்கள், அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், சமுக இயக்கங்கள், மத நிறுவனங்கள் போன்றன செயற்படுகின்றன.
- அரசு மனிதக்கட்டமைப்பாகும் எனினும் இது மனித நிறுவனங்களின் உயர்வான நிறுவனமாகும்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# அரசறிவியல்

## தரம் - 12, 13

**அரசு மனித அமைப்பு நிறுவனங்களில் மேலான ஒழுங்கமைப்பு என்பது இருபெரும் வாதங்களில் முன்வைக்கப்படுகின்றன.**

**அரிஸ்டோட்டில் வாதம்:**

அரசறிவியலின் தந்தையான அரிஸ்டோட்டில் அரசு சமுகநிறுவனமாவதோடு மனிதர்களின் உயர்வான பொதுநலனுக்காக செயற்படுவதால் இது ஏனைய சமுகநிறுவனங்களை விட உயர்வானது.

**மக்ஸ் வெபரின் வாதம்:**

20 நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜேர்மனியில் வாழ்ந்த சமுகவியலாளரான மக்ஸ்வெபர் "தொழிலாக அரசியல்" (1919) கட்டரையில் அரசு என்பது "வரையறுக்கப்பட்ட ஆள்புல பிரே-தசத்தில் பலாத்கார அதிகாரத்தை வெளிப்படையாக பயன்படுத்தும் தனியுரிமை தமக்கே உள்ளது எனக் கூறும் மனிதக் குழுவாகும்" என்றார். இதற்கு அரசுக்கு சட்டதிட்டங்களும் நிறுவனங்களும் உண்டு. பாராளுமன்றம், சட்டதிட்டங்கள், நீதிமன்றங்கள், பணியகமைப்பு, பொலிஸ்படை, இராணுவம், சிறைச்சாலை போன்றவற்றை குறிப்பிடலாம்.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.றஞ்சினி பாலகரன் , ஆசிரியர் - அரசறிவியல், (யா/இந்து மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# அரசறிவியல்

## தரம் - 12, 13

**நவீன அரசு**

நவீன தேசிய அரசு என்பது நவீன அரசுகளை அடையாளப்படுத்த சமுகவியலில் பயன்படுத்தப்படும் 18 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பயன்படுத்தப்பட்ட ஓர் எண்ணக்கருவாகும்.

அதன்படி பொதுவாக நோக்குகையில் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பினுள் நிலைத்து வாழும் மக்களால் உருவாக்கப்பட்ட அரசாங்கம் என்ற தாபனத்தின் மூலம் இறைமை பெற்று விளங்கவதுடன் யுத்தம் சமாதானம் என்பவற்றினூடாக உலக சமுதாயத்துடன் சர்வதேச உறவுகளை மேற்கொள்வதே அரசு எனலாம்.

**நவீன ஆள்புல (பௌதீக) அரசு**

- வரையறுக்கப்பட்ட ஆள்புலம்
- சனத்தொகை
- அரசாங்கம்
- இறைமை

இவற்றுள் முதல் இரு அம்சங்களும் அரசு ஒன்றின் பௌதிக அம்சங்களாகவும் மற்றையவை அக அம்சங்களாகவும் காணப்படுகின்றது. எனினும் இவ் அம்சங்கள் அளவிலும், பண்பிலும், தன்மையிலும் வேறுபட்டுக் காணப்பட்டாலும் ஓர் அரசின் செயற்பாட்டிற்கு அடிப்படையானதாகும்.

**வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பு**

இங்கு கடல், தரை, வான் எல்லைகளைக் குறிப்பிடுவதோடு அதிலுள்ள நிலம். கடல்கள், ஆறுகள், பிறநீர்நிலைகள், காடுகள், மலைகள், அண்டவெளிகள் என்பன அடங்கும் நிலப்பரப்பு சிறியதாகவும் இருக்கலாம் பெரியதாகவும் இருக்கலாம்.

பெரிய நிலப்பரப்பு நாடுகள் - ரஷ்யா, கனடா, சீனா, அவுஸ்ரேலியா

சிறிய நிலப்பரப்பு நாடு - வத்திகான், மோல்டா, நவுரு

**மக்கள் தொகை:**

அரசு என்பது மக்கள் கூடி வாழும் ஓர் அமைப்பு. எனவே மக்களின்றி அரசு அமையமுடியாது. வரையறுக்கப்பட்ட பிரதேசம் மட்டும் அரசாகிட முடியாது. அப்பிரதேசத்தில் நிலைத்து வாழ்கின்ற மக்கள் அவசியமானதாகும்.

சனத்தொகை எண்ணிக்கை வரையறை தேவையில்லை. உதாரணமாக

சீனா, இந்தியா - கூடிய சனத்தொகை

ஷன்மாறியோ, மறாக்கா - குறைந்த சனத்தொகை.

தொகுப்பு :- திருமதி.றஞ்சினி பாலகரன் , ஆசிரியர் - அரசறிவியல், (யா/இந்து மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

**அரசாங்கம்:**

அரசு ஒன்றின் செயற்பாட்டிற்கு மூலகாரணமாக அமைவது அரசாங்கமாகும். இதனால் அரசாங்கம் என்பது அரசின் ஒரு கருவியாகும். இதனூடாகவே அரசின் விருப்பம் வெளிப்பட்டு செயற்படுகின்றது. சமுகத்தின் கீழ் நிலையிலிருந்து மேல்நிலைவரை அனைத்து விவகாரங்களையும் முகாமை செய்வது அரசாங்கமாகும். நாட்டின் உள்ளேயும் வெளியேயும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலைநாட்டல் அதன் முக்கிய பணியாகும்.

**இறைமை:**

அரசொன்றின் மூலக் கூறுகளில் பிரதானமாக அமைவது இறைமையாகும். இவ்விறைமை என்பது உயர்ந்த அதிகாரம் எனப்படும். அரசை ஏனைய சமுக நிறுவனங்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவது இவ்விறைமை எனும் அம்சமே. இதனைப் பயன்படுத்தியே அரசு சட்டங்களை இயற்றி அதனை நடைமுறைப்படுத்துகின்றது.

இறைமை பிரதானமாக உள், வெளி இறைமை என இரண்டு வகைப்படும்.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## உலகமயமாக்கமும் அரசும்

உலகமயமாதல் என்பது தற்காலத்தில் சமூகப் பொருளாதார அரசியல் தளங்களில் பிரபல்யமானதொரு சொல்லாடலாக அமைந்துள்ளது. உலகமயமாதல் என்ற பதத்தினை தியோடா லெலிற் என்பவரே முதலில் பயன்படுத்தியுள்ளார்.

மேற்குலக நாடுகளின் ஆதிக்கத்திற்கும் அபிலாசைகளிற்கும் காத்திரமான பங்களிப்பை உலகமயமாதல் வழங்குகின்றது.

**உலகமயமாதலானது**

- சூழலியலில் உலகமயமாக்கம்
- அரசியல் உலகமயமாக்கம்
- பொருளாதார உலகமயமாக்கம்
- சமூக கலாசார உலகமயமாக்கம்

என 4 வகையாக வகைப்படுத்தலாம்.

இது பொருளாதாரம், வெளிநாட்டு வர்த்தகம், வெளிநாட்டு உறவுகள், தேசிய பாதுகாப்பு ஆகிய நான்கு துறைகளில் உலகலாவிய ரீதியான ஒத்துழைப்பை பெறுவதாகும்.

- இதற்கு பல்தேசிய கம்பனிகள் தமது ஆதிக்கத்தினை அரசுகள் மீது பிரயோகிக்கின்றன.
- இது தொடர்பாக இரு கோட்பாட்டு அணுகுமுறைகள் முன்வைக்கப்பட்டன
    - I. உலகமயமாக்கலினுள் தேசிய அரசுகள் இறுதியை அடையும்
    - II. தேசிய அரசுகள் நிறைவடையாமல் அது மீள் கட்டமைப்புக்கு உட்படுவது.
- உலகமயமாதலின் பின்னர் தேசிய அரசுமுறைமை பிரச்சனைக்குள்ளாகியது.
    - ⇒ மூலதனத்துக்கு, தகவலுக்கு, தொழிநுட்பம் மனிதர்களின் நிறுவனங்களின் வலையமைப்பை தேசிய எல்லை அவசியப்படாததோடு, தேசிய அரசுகளின் எல்லையை கருத்தில் கொள்ளாமலே செயற்பட்டு வருகின்றன.
    - ⇒ இதனை பேராசிரியர் ஜீன் மேரி கெஹென்னோ “தேசிய அரசுகளின் முடிவு” என்ற பத்திரிகையின் மூலம் குறிப்பிட்டுள்ளார்.
- இதற்கு மாறுபட்ட கருத்துக்களும் எழுந்துள்ளன. அதாவது “உலக மூலதனம் அரசின் கட்டுப்பாட்டில் இருந்து விடுபட்டு அரச நிருவாகத்தில் இருந்து சுயாதீனமடைந்துள்ளன” எனவும் கூறப்படுகின்றது.
- டேவிட் ஹெல்ட் 1991 ஆண்டு “ஜனநாயகம் தேசிய அரசு மற்றும் உலகமயமாக்கம்” என்ற கட்டுரையில் உலகமயமாக்கலினால் ஒருதனி அரசின் தலைவர் அரசிலும் நிருவாகத்திலும் உட்படாத புதிய உலகப்பொருளாதார முறைமை கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசுக்கு வெளியே உள்ள சர்வதேச அமைப்புக்களுக்கு மிகவும் பலம்வாய்ந்த அரசுகளின் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்துவதற்கும் அழுத்தம் கொடுப்பதற்கான திறன்கள் கிடைத்துள்ளது.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

# அரசறிவியல்

## தரம் - 12, 13

1. அரசாங்கத்தின் துறைகள் இரண்டைக் குறிப்பிடுக.
2. "அரசு சமுகநிறுவனமாவதோடு மனிதர்களின் உயர்வான பொதுநலனுக்காக செயற்படுவதால் இது ஏனைய சமுகநிறுவனங்களை விட உயர்வானது"

   "வரையறுக்கப்பட்ட ஆள்புலப் பிரதேசத்தில் பலாத்கார அதிகாரத்தை வெளிப்படையாக பயன்படுத்தும் தனியரிமை தமக்கே உள்ளது"

   இரு கூற்றுக்களுடனும் தொடர்புபடும் அறிஞர்களைக் குறிப்பிடுக.
3. அரசின் அடிப்படைக் கூறுகள் இரண்டு தருக.
4. உலகமயமாதல் என்ற பதம் முதல்முதல் பயன்படுத்திய பத்திரிகையையும் அறிஞரையும் குறிப்பிடுக.
5. "தேசிய அரசுகளின் முடிவு" என்ற பத்திரிகையின் ஆசிரியரையும்

   "ஜனநாயகம்" என்ற பத்திரிகையின் ஆசிரியரையும் குறிப்பிடுக.

1) அரசின் அடிப்படைக் கூறுகளை ஆராய்க.

*2)* தேசிய அரசு உலகமயமாதல் மூலம் எதிர் நோக்கும் சவால்களை ஆராய்க.

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.றஞ்சினி பாலகரன் , ஆசிரியர் - அரசறிவியல், (யா/இந்து மகளிர் கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.ச.சசிஸ்குமார், ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழினுட்பம், (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk